**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 55/2023**

**Deposition of witness for prosecution : PW - 5 (LW-6 )**

| **Name** | **முருகையன்** | **Father's Name** | **பக்கிரி** |
|---|---|---|---|
| **Village** | | **Taluk** | |
| **Calling** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 24-02-2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது வேதாரண்யத்தில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். இந்த கையெழுத்துக்களை தோப்புத்துறை ஆற்காட்டுத்தெருவிற்கும் செல்லும் பாதையில் வைத்து போட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சியின் வாக்குமூலம் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.</u>**

போலீசார் விசாரணையில் கடந்த 25.01.2022ம் தேதி மதியம் 12.00 மணியளவில் நானும், வேதாரண்யம் சின்னச்சாலையை சேர்ந்த சுப்பன் மகன் சோமு என்பவரும் வேதாரண்யம் வள்ளியம்மை சாலையில் உள்ள வனதுர்க்கையம்மன் ஆலயத்திற்கு செல்லும் வழியில் ஆற்காட்டுத்துறையை சேர்ந்த கோதண்டபாணியின் தோப்பு அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த வேதாரண்யம் காவல் நிலைய ஆய்வாளர் இந்த இடத்தில் (24.01.2022) இரவு 1.30 மணியளவில் எதிரிக்கும், அ.சா.1க்கும் இடையே பிரச்னை ஏற்பட்டு எதிரி அ.சா.1ஐ கத்தியால் தாக்கி கொலை செய்ய முயற்சி செய்ததாகவும், மேற்படி சம்பவம் சம்மந்தமாக அ.சா.1 கொடுத்த புகாரின் அடிப்படையில் வேதாரண்யம்காவல் நிலைய குற்ற எண்.30/2022ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், மேற்படி சோமுவும் சாட்சி கையொப்பம்

இட்டோம் என்றும் , சம்பவ இடத்திற்கு அருகாமையில் கிடந்த எதிரிக்கு சொந்தமான டிராக்டரை கைப்பற்றினார்கள் என்றும், அதற்கு அருகாமையில் அ.சா.1ஐ தாக்க எதிரி பயன்படுத்திய ரத்தக்கறை படிந்த மரப்பிடியுடன் கூடிய கத்தியையும் கைப்பற்றுதல் மகசர் மூலமாக கைப்பற்றினார்கள் என்றும், அதில் நானும், சோமுவும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறி விட்டு தற்போது ஆஜர் எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை – இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, NAGAPATTINAM**
**SESSIONS CASE No. 55/2023**

**Deposition of witness for prosecution : PW - 4 (LW-5 )**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **பாண்டியன்** | **Father's Name** | |
| **Village** | | **Taluk** | |
| **Calling** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on 24-02-2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது தேத்தாக்குடியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1ஐ தெரியாது. ஆஜர் எதிரியை தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதல்ல.

**சாட்சியின் வாக்குமூலம் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.**

போலீசார் விசாரணையில் கடந்த 26.03.2022ம் தேதி காலை 9.45 மணியளவில் தேத்தாக்குடி முடுக்குவேலி அருகில் நானும், தேத்தாக்குடியை சேர்ந்த ரெங்கசாமி மகன் கோபாலகிருஷ்ணனும் நின்று கொண்டிருந்தபோது வேதாரண்யம் காவல் நிலைய ஆய்வாளர் அங்கு நின்ற ஒரு நபரை கைது செய்தார் என்றும், நாங்கள் அருகில் சென்று பார்த்தபோது மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் கைது செய்யப்பட்ட நபர் அப்பு என்கிற சிவகணேஷ் என்றும், அவரை வேதாரண்யம் காவல் நிலைய குற்ற எண். 30/2022ன்படி கைது செய்திருப்பதாகவும், அவரை விசாரிக்க சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன்படி எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், மேற்படி கோபாலகிருஷ்ணனும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றும் போலீசார் விசாரணையில் கூறி விட்டு தற்போது ஆஜர் எதிரியை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பிலான குறுக்கு விசாரணை – இல்லை**